DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.54/2022**

Deposition of witness for Prosecution அ.சா.7

Name : சந்திரசேகர்
Father/ Husband Name : சேகர்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.10.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 07.12.2020-ம் தேதி தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலர் 1480 திரு.மூர்த்தி பணியில் இருந்த போது அ.சா.1 நிர்மலா கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவை பெற்று நகர் காவல் நிலைய குற்ற எண்.331/2020 இதச பிரிவுகள் 341, 294(b), 324, 355, 506(2) -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அன்றைய தினம் என் பார்வைக்கு வைத்த மேற்படி வழக்கு கோப்பை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 15.15 மணிக்கு சம்பவம் இடம் சென்று பட்டியல் சாட்சி 6,7 முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ. 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவ சாட்சிகள் 1 முதல் 8 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளில் 2 வது எதிரி இளம்குற்றவாளி என்பதால் அது குறித்த அறிக்கையை இளஞ்சிறார் நீதிகுழுமத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரி இருதயரஜினி மாண்புமிகு.சிவகங்கை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில்

சரணடைந்துவிட்டார். பின்னர் அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. வைரவசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கொடுத்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பெற்றேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரி மீது 15.02.2021-ம் தேதி இதச பிரிவுகள் 341, 294(b), 324, 355, 506(2) -ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் சம்பவ இடத்தில் வைத்து அ.சா.1யை விசாரிக்கவில்லை, மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். நான் அன்றைய தினமே மருத்துவமனைக்கு சென்று அ.சா.1யை விசாரித்தேன். அ.சா.4 மற்றும் 2யை சம்பவத்தன்றே விசாரித்தேன். அ.சா.4 மற்றும் 2யை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். மற்ற சாட்சிகளையும் சம்பவ இடத்தில் வைத்து தான் விசாரித்தேன். நான் சம்பவ இடத்தில் வைத்து எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றும் தலைமைக்காவலர் திரு.மூர்த்திதான் பார்வை மகஜர் சாட்சிகளை நிலையத்தில் வைத்து விசாரித்தார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் சம்பவ இடத்தில் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி இந்த சம்பவம் தொடர்பாக புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் தெரியாது.

2. என்னுடைய விசாரணையில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. புகாரை புகார்தாரர்தான் எழுதினார். எதிரி மீது வேறு வழக்கு உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் புகார்தாரரை விசாரிக்கவில்லை என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும் தலைமைக்காவலர் மூர்த்தி விசாரித்ததன் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு எந்த இடத்தில் காயம் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இடுப்பில் வலது பக்கம், முதுகு தண்டுவடம், இடது கால் முட்டி ஆகிய இடங்களில் ஏற்பட்டது. மேற்படி காயங்கள் எதிரி தள்ளிவிட்டு செங்கல்லால் அடித்ததால் ஏற்பட்டது.நான் சம்பவ இடத்திலிருந்து செங்கல் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

3. காயம்பட்ட புகார்தாரரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றது என்று என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் சாட்சி அமுதவள்ளி, கவிதா ஆகியோர் அழைத்து சென்றார்கள். எத்தனை மணிக்கு அழைத்து சென்றார்கள் என்றால் காலை 10.00-10.30 மணிக்கு அழைத்து சென்றுள்ளார்கள். புகார்தாரருக்கு எதிரியால் காயம் ஏற்படவில்லை என்றும் புகார்தாரர்தான் கால்வாயில் விழுந்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும் தலைமைக் காவலர் மூர்த்தி அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.